### அமெரிக்கா உள்ளிட்ட 4 நாடுகளிலிருந்து

# 662 இந்திய பழங்காலப் பொருட்கள் மீட்பு!

## மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்விக்கு - ஒன்றிய அரசு பதில்!

புதுடெல்லி, ஆகஸ்ட் 11-

தென் சென்னை மக்களவை உறுப்பினர் டாக்டர் தமிழச்சி தங்கபாண்டியன், வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட இந்திய பழங்கால கலைப் பொருட்கள் மற்றும் தொல்பொருட்களை மீட்டு வருவது, கோஹினூர் வைரம், அமராவதி பளிங்குச் சிற்பங்கள் உள்ளிட்ட இந்திய பாரம்பரியப் பொருட்களை மீட்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் வெளிநாட்டு அருங்காட்சியகங்களில் உள்ள இந்திய தொல் பொருட்கள் குறித்த விவரங்கள் தொடர்பாக மக்களவையில் கேள்வி எழுப்பினார்.

**இந்திய பொக்கிஷங்கள் மீட்கப்பட்டுள்ளதா?**

அதாவது, கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து திருடப்பட்ட 610 கலைப்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளனவா? அப்படியானால் அதன் விவரங்கள் என்ன? கோஹினூர் வைரம், அமராவதி பளிங்குச் சிற்பங்கள் மற்றும் இடைக்காலத்தைச் சேர்ந்த பல்வேறு சிற்பங்கள், சிலைகள், கல்வெட்டுகள் போன்ற பழங்காலப் பொக்கிஷங்கள் இன்னும் வெளிநாடுகளில் இருந்து இந்தியாவுக்கு மீட்டுக் கொண்டுவரப்படாமல் உள்ளனவா? அவற்றின் விவரங்கள் மற்றும் அதற்கான காரணங்கள் என்ன? மேலும், இந்தியாவில் இருந்து திருடப்பட்டு வெளிநாடுகளில் உள்ள அருங்காட்சியகங்களில் வைக்கப்பட்டுள்ள, இன்னும் மீட்கப்படாத தொல்பொருட்களின் பட்டியல் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை குறித்த தரவுகள் மத்திய அரசு மற்றும் இந்திய தொல்லியல் துறையிடம் (ASI) உள்ளதா? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய கலாசாரம் மற்றும் சுற்றுலாத்துறை



அமைச்சர் கஜேந்திர சிங் ஷெகாவத் எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார்.

அந்தப் பதிலில் :

அமெரிக்கா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து மற்றும் நெதர்லாந்து ஆகிய நான்கு நாடுகளிலிருந்து இதுவரை மொத்தம் 662 இந்திய தொல்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக அமெரிக்காவிலிருந்து 589 தொல் பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன. ஆஸ்திரேலியாவிலிருந்து 51, இங்கிலாந்திலிருந்து 21, நெதர்லாந்திலிருந்து 1 தொல் பொருள் என மொத்தம் 662 தொல்பொருட்கள் மீட்கப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

காலனித்துவ காலத்தில் இந்தியாவிலிருந்து வெளிநாடுகளுக்கு எடுத்துச் செல்லப்பட்ட பொருட்களை மீட்பது தொடர்பான விவகாரங்களை மத்திய அரசு பல்வேறு தளங்களில் தொடர்ந்து எழுப்பி வருகிறது. அவற்றை மீட்பதற்கான நடவடிக்கைகள், ஒவ்வொரு பொருளையும் தனித்தனியாக பரிசீலித்து, பொருந்தக்கூடிய தேசிய மற்றும் சர்வதேச சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றன. சம்பந்தப்பட்ட நாடுகள் மற்றும் அரசுகளுக்கு இடையேயான பரஸ்பர புரிதல் மற்றும் ஒத்துழைப்பின் மூலம் இத்தகைய பொருட்களை மீட்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

**முழுமையான பட்டியல் அரசிடம் இல்லை!**

அதேநேரத்தில், கோஹினூர் வைரம், அமராவதி பளிங்குச் சிற்பங்கள் உள்ளிட்ட பொருட்களை மீட்பது தொடர்பாக எழுப்பப்பட்ட கேள்விக்கான பதிலை மத்திய அரசு தனது பதிலில் குறிப்பிடவில்லை. காலனித்துவ காலத்தில் வெளிநாடுகளுக்கு எடுத்துச்செல்லப்பட்ட பொருட்களை மீட்பது ஒவ்வொரு வழக்கின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாக மட்டுமே தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகம் முழுவதும் உள்ள பல அருங்காட்சியகங்கள் மற்றும் கலைக்கூடங்களில் இந்திய தொல்பொருட்கள் உள்ளன. மேலும், தனிநபர்களிடமும் இத்தகைய பொருட்கள் உள்ளன. ஆனால், வெளிநாடுகளில் உள்ள இந்திய தொல்பொருட்கள் குறித்த முழுமையான பட்டியல் அரசிடம் இல்லை என்று மத்திய அரசு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டில் சட்ட விரோதமாக ஏற்றுமதி செய்யப்பட்ட இந்தியாவைச் சேர்ந்த தொல்பொருள் இருப்பது குறித்து தகவல் கிடைக்கும்போது, அதை மீட்டு இந்தியாவுக்கு கொண்டுவர சம்பந்தப்பட்ட நாட்டிலுள்ள இந்திய தூதரகம் அல்லது இந்தியத் தூதரகப் பணியகம் மூலம் தேவையான நடவடிக்கைகள் தொடங்கப்படுகின்றன..

இவ்வாறு பதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

### வேலூரில் விமான நிலையம்

# இன்னும் எத்தனை நாள் காத்திருக்க வேண்டும்!

## மக்களவையில் டி.எம்.கதிர் ஆனந்த் ஒத்திவைப்புத் தீர்மானம்!

புதுடெல்லி ஆக..11–

”வேலூர் இன்னும் எத்தனை நாள் காத்திருக்க வேண்டும்? என்று குறிப்பிட்டு வேலூர் விமான நிலைய தாமதம் குறித்து ஆகஸ்ட் 10 அன்று மக்களவையில் வேலூர் எம்.பி. டி. எம். கதிர் ஆனந்த் அவசர ஒத்திவைப்புத் தீர்மானம் அளித்தார்.

வேலூர் விமான நிலையத்தை வணிக ரீதியான விமான சேவைக்கு உடனடியாக கொண்டு வருவதில் தொடர்ந்து ஏற்பட்டுவரும் தாமதம் குறித்து, மக்களவையின் வழக்கமான அலுவல்களை ஒத்திவைத்து அவசரமாக விவாதிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, 10 ஆகஸ்ட் 2026 அன்று மக்களவையில் ஒத்திவைப்புத் தீர்மானம் (Adjournment Motion) கொண்டு வருவதற்கான அறிவிப்பை வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி. எம். கதிர் ஆனந்த் அளித்துள்ளார்.

வேலூர் விமான நிலையத்தின் கட்டமைப்புப் பணிகள் பெருமளவில் நிறைவடைந்துள்ள நிலையிலும், உரிமம், பாதுகாப்பு அனுமதி மற்றும் செயல்பாட்டுத் தயார் நிலை போன்ற காரணங்களால் தொடர்ந்து வணிக விமான சேவை தொடங்கப்படாமல் இருப்பது குறித்து மத்திய அரசு உடனடியாக விளக்கம் அளிக்க வேண்டும் என



அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஆகஸ்ட் 8, 2026 அன்று மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் கிஞ்சராப்பு ராம்மோகன் நாயுடு, வேலூர் விமான நிலையத்தின் மீதமுள்ள பணிகளை விரைவுபடுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியதுடன், அடுத்த ஆறு மாதங்களுக்குள் விமான நிலையம் பயன்பாட்டுக்கு வரும் என உறுதியளித்ததாக செய்திகள் வெளியாகியுள்ளன.

அமைச்சரின் நேரடி கவனத்தையும் நடவடிக்கையையும் வரவேற்ற கதிர் ஆனந்த் எம்.பி., இந்த உறுதி இம்முறை காலக்கெடு நிர்ணயிக்கப்பட்ட செயல் திட்டமாக மாற வேண்டும் என்று வலியுறுத்தினார்.

”வேலூர் விமான நிலைய விவகாரத்தில் மத்திய சிவில் விமானப் போக்குவரத்துத் துறை அமைச்சர் நேரடியாக கவனம் செலுத்தி, பணிகளை விரைவுபடுத்த அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியிருப்பதை நான் வரவேற்கிறேன். வேலூருக்கான எந்த நல்ல முயற்சியையும் நான் மனப்பூர்வமாக பாராட்டுகிறேன். ஆனால் வேலூர் மக்கள் பல ஆண்டுகளாக காலக்கெடுக்களையே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இனி எங்களுக்கு வேண்டியது இன்னொரு வாக்குறுதி அல்ல – உண்மையில் பறக்கும் விமானம்.

இது இன்று தொடங்கிய போராட்டமல்ல – தொடர்ச்சியான நாடாளுமன்ற முயற்சி

வேலூர் விமான நிலையத்திற்காக தற்போது அளிக்கப்பட்டுள்ள ஒத்திவைப்புத் தீர்மானம் திடீரென மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை அல்ல என்றும், பல ஆண்டுகளாக நாடாளுமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் தொடர்ந்து மேற்கொண்டு வரும் முயற்சியின் அடுத்த கட்டமே இது என்றும் கதிர் ஆனந்த் தெரிவித்துள்ளார்.

---

### எல் நினோவிலிருந்து மக்களைக் காக்க

# ஒன்றிய அரசு எடுத்த நடவடிக்கைகள் என்ன?

## மாநிலங்களவையில் இரா.கிரிராஜன் கேள்வி!

புதுடெல்லி, ஆக. 11–

எல் நினோவின் விளைவுகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க என்னென்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என ஒன்றிய அரசிடம் தி.மு.க. எம்.பி. கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் இரா.கிரி ராஜன் மழைக்கால கூட்டத்தொடரில் கலந்து கொண்டு ஒன்றிய அரசின் புவி அறிவியல் துறை அமைச்சரிடம் இந்தியாவின் பருவமழையின் மீது எல் நினோவின் தாக்கம் குறித்து கேள்விகளை எழுப்பி உள்ளார்.

அவற்றில், 2026–2027ஆம் ஆண்டில் இந்தியாவில் ஒரு வலுவான ”சூப்பர் எல் நினோ ஏற்பட வாய்ப்புள்ளதா? அதன் விளை



வாக பருவமழை பொய்த்துப் போதல், அசாதாரண வெப்பநிலை உயர்வு, மத்திய இந்தியாவில் வறட்சி, சென்னை உள்ளிட்ட கடலோரத் தமிழ்நாட்டில் அதிக வெள்ளப்பெருக்கு ஏற்படக் கூடுமா? எல் நினோவின் விளைவுகளிலிருந்து மக்களைப் பாதுகாக்க என்ன முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? பயிர் விளைச்சல், உணவு விலைகள், எரிசக்தி தேவை, பொருளாதார இழப்புகள் ஆகியவற்றின் மீதான எல் நினோவின் விளைவுகளை குறைப்பதற்காக என்ன மாதிரியான முன்கூட்டிய தயார்நிலை மற்றும் தகவமைப்பு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன? என்ற கேள்விகளை எழுப்பினார்.

இந்த கேள்விகளுக்கு பதிலளித்துள்ள ஒன்றிய அரசின் அறிவியல், தொழில்நுட்பம், புவி அறிவியல் அமைச்சகத்தின் இணை அமைச்சர் ஜிதேந்திர சிங் அளித்துள்ள பதிலில், உலக வானிலை ஆய்வு நிறுவனத்தாலோ (WMO) அல்லது இந்திய வானிலை ஆய்வு துறையாலோ (IMD) ”சூப்பர் எல் நினோ என்று அழைக்கப்படும் அதிகாரப்பூர்வமாக எதையும் வரையறுக்கவில்லை என தெரிவித்துள்ளார். 2026ஆம் ஆண்டு தென் மேற்குப் பருவ மழைக் காலத்தில் எல் நினோ நிலைமைகள் உருவாகும் என்று இந்திய வானிலை ஆய்வுத் துறை கணித்துள்ளது; எல் நினோ நிலைமைகள் ஜூன் 2026–ல் பலவீனமாக இருந்து, ஜூலை 2026–ல் மிதமான நிலைகளுக்குத் தீவிர மடைந்துள்ளன என இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

2026 அக்டோபர்–டிசம்பர் பருவத்தில் எல் நினோ மேலும் வலுப்பெற்று, மிகவும் வலுவான நிலையை அடையக்கூடும் என்றாலும், அதன் தீவிரம் மற்றும் இந்திய பகுதிகள் மீதான தாக்கங்கள் ஆகியவை ஒன்றிணைந்த கடல்–வளிமண்டல நிலைமைகளின் வளர்ச்சியைப் பொறுத்தே அமைவதற்கு எல் நினோவும் அதன் ஒரு காரணியாக இருப்பதாக விளக்கம் அளித்துள்ளார்.

எல் நினோ மற்றும் பிற கால நிலை காரணிகளின் வளர்ச்சியை இந்திய வானிலை ஆய்வுத் துறை தொடர்ந்து கண்காணித்து, மத்திய மற்றும் மாநில அரசுகளுக்கு பருவ கால மற்றும் மாதாந்திர முன்னறிவிப்புகள், நீண்ட கால முன்னறிவிப்புகள், வானிலை ஆலோசனைகள் ஆகியவற்றை வெளியிடுகிறது என்றும்; பேரிடர் மேலாண்மை அதிகாரிகள், மாநில அரசுகள், மாவட்ட நிர்வாகங்கள் உள்ளிட்டோர் தயார்நிலை மற்றும் மீட்பு நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் வகையில் பயன்படுத்துவதற்காக, ஒரு வார அத்த காலத்துக்கு செல்லுபடியாகும் ‘பாதிப்பு அடிப்படையிலான முன்னறிவிப்புகள்’ மற்றும் இடர் அடிப்படையிலான எச்சரிக்கைகளை தினசரி தகவல் தொடர்பு வழிகள் மூலம் வெளியிடுகிறது என்றும் ஒன்றிய அரசு பதிலளித்துள்ளது.

---

### SIR - வாக்காளர் பட்டியலிலிருந்து

# சிறுபான்மையினர் எவ்வளவு பேர் நீக்கப்பட்டுள்ளனர்?

## மாநிலங்களவையில் கவிஞர் சல்மா கேள்வி!

புதுடெல்லி, ஆக. 11–

‘‘SIR வாக்காளர் பட்டியலிலிருந்து சிறுபான்மையினர் எவ்வளவு பேர் நீக்கப்பட்டுள்ளனர்? என்று நாடாளுமன்ற மாநிலங்களவையில் கவிஞர் சல்மா கேள்வி எழுப்பினார்.

இதுகுறித்து அவர் மாநிலங்களவையில் எழுப்பிய கேள்வி வருமாறு:–

a) தேர்தல் வாக்காளர் பட்டியலின் Special Intensive Revision – SIR குறித்து

United Nations Special Rapporteur தெரிவித்துள்ள கவலைகளை அரசு கவனத்தில் எடுத்துள்ளதா;

b) குறிப்பாக சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்த வாக்காளர்களின் பெயர்கள் அதிக அளவில் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்பட்ட தாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளை அரசு ஆய்வு செய்துள்ளதா? அவ்வாறு ஆய்வு செய்திருந்தால்,

அதன் விவரங்கள் யாவை;

c) 2025ஆம் ஆண்டு SIR தொடங்கப்பட்டதிலிருந்து, மாநில வாரியாகவும், சமூக வாரியாகவும் வாக்காளர் பட்டியலிலிருந்து நீக்கப்பட்ட பெயர்களின் எண்ணிக்கை எவ்வளவு; மற்றும்

d) மேற்கண்ட பெயர் நீக்கங்களுக்கு எதிராக மாநில வாரியாகவும், சமூக வாரியாகவும் பெறப்பட்ட ஆட்சேபனைகள் (Objections) எத்தனை?

அவற்றின் விவரங்கள் யாவை.

இவ்வாறு அவர் கேள்வி எழுப்பினார்.

இதற்கு அமைச்சர் ஸ்ரீ அர்ஜுன் ராம் மேக்வால் அளித்த பதில் வருமாறு:–

ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்பு அறிக்கையாளர் (United Nations Special Rapporteur), இந்தியத் தேர்தல் ஆணையத்தால் (ECI) மேற்கொள்ளப்படும் சிறப்பு தீவிர திருத்தம் (Special Intensive Revision – SIR) என்ற நடைமுறையின் மூலம், குறிப்பாக மேற்கு வங்காளத்தில், வாக்காளர் பட்டியல்களில் இருந்து பெருமளவில் பெயர்கள் நீக்கப்படுவது குறித்து கவலை தெரிவித்திருப்பது கவனத்திற்கு வந்துள்ளது.

கடந்த சில ஆண்டுகளில் ஏற்பட்ட வேகமான நகரமயமாக்கல், கல்வி அல்லது வேலைவாய்ப்புக்காக மக்கள் இடம்பெயர்தல் மற்றும் பிற சமூக பொருளாதார மாற்றங்கள் காரணமாக, மக்கள் அடிக்கடி தங்களது வசிப்பிடங்களை மாற்றும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக, பல வாக்காளர்கள் புதிய தொகுதியில் பதிவு செய்திருந்தாலும், அவர்களின் பெயர்கள் முந்தைய வாக்காளர் பட்டியல்களிலும் தொடர்ந்து இடம் பெறுகின்றன. இதனால் நகல் பதிவுகள் அல்லது தவறான பதிவுகள் ஏற்படுகின்றன.

இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக, எந்தவொரு குழுவையோ அல்லது சமூகத்தையோ பாரபட்சமாக நடத்தாமல், சட்டத்தின்படி உரிய நடைமுறைகளைப் பின்பற்றி SIR மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், SIR நடைமுறையின் ஒவ்வொரு கட்டத்திலும் உள்தரக் கட்



டுப்பாட்டு நடவடிக்கைகள் (Internal Quality Checks) மேற்கொள்ளப்படுவதாக இந்தியத் தேர்தல் ஆணையம் அவ்வப்போது தெளிவுபடுத்தியுள்ளது.

மேலும், வாக்காளர் பட்டியல் இறுதி செய்யப்பட்ட பிறகும் மேல்முறையீடு செய்யும் வாய்ப்பு உள்ளது. மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1950இன் பிரிவு 24இன் படி, முதலில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரிடம் (District Magistrate) மேல்முறையீடு செய்யலாம். அதன்பின்னர், சம்பந்தப்பட்ட தலைமைத் தேர்தல் அலுவலரிடம் (Chief Electoral Officer) மேல்முறையீடு செய்யலாம் என அமைச்சர் பதிலளித்தார்.

---

# முத்தமிழர் மூச்சொலியே! முரசொலியே வாழியவே!



கையெழுத்துப் பிரதியாய்
கருவாகித் தமிழர்தம்
மெய்யெழுத்தாய், உயிரெழுத்தாய்,
மேவும்உயிர் மெய்யெழுத்தாய்
வையத் தமிழர்நிலை
மாற்றவந்தத் தலையெழுத்தாய்
உய்யும்எங்கள் வாழ்வுக்கே
உணர்வளித்த விழுமியமே!

ஏற்றிஉன்னை மூட்டைகட்டி
இருமுதுகில் சுமந்துவர,
காற்றடித்து மரப்பாலம்
கவிழ்ந்திட “ஓடம்போக்கி”
ஆற்றினிலே கலைஞருடன்
அவர்நண்பர் தென்னனுடன்
சேற்றில் விழுந்தெழுந்த
செல்வமே! நித்திலமே!

மாணுயர்ந்த செந்தமிழர்
மரபுகளை உலகுக்குக்
காணுக எனக்காட்டும்
கருத்துமணிப் பெட்டகமே!
நாணத் தகும்அந்த
“நால்வருணப்” பிற்போக்கை
ஆணிவே ருடன்கிள்ளி
அறுத்தஅறி வாயுதமே!

முரட்டுப் பழமைகளின்
மூட நம்பிக்கை
இருட்டைக் கிழித்தெறிய
எழுந்துவந்த ஒளிக்கதிரே!
மருட்டும் மதவாத
மடமைகளின் கொடுமைகளைப்
புரட்டித் தகர்த்தெறிந்துப்
பொசுக்கவந்த கனற்பிழம்பே!

நாடு,மொழி, கலாச்சார,
நாகரிகம், பண்பாட்டைப்
பாடுதமிழ்ப் பாவியமே!
பைந்தமிழர் உள்ளமெலாம்
ஊடுருவிப் பதிந்ததமிழ்
ஓவியமே! எந்தமிழர்
நீடுபுகழ் வரலாற்றை
நினைவூட்டும் காவியமே!

ஒழிக!எனும் ஒடுக்குமுறை!
உருவற்றுத் தடயமின்றி
அழிக!எனும் அடக்குமுறை!
அத்தனைக்கும் ஈடுதந்தே
எழுகதிராய் “எண்பத்தைந்
தாண்டுகளாய்” இயங்கிவரும்
கழகத்தின் கேடயமே!

களமறவர் போர்வாளே!
ஈர்த்திழுத்தே இளைஞர்களின்
இதயத்தில் தமிழுணர்ச்சி
சேர்த்துப் பெருகவைக்கும்
செயலூக்க நிலைக்களமே!
ஆர்த்து மொழிப்போரில்
அணிவகுக்கும் வீரருக்கு
வார்த்துப் படைக்கலன்கள்
வடித்தளிக்கும் உலைக்களமே!

சொத்தெழுதி வைத்திருக்கும்
பத்திரம்போல், எம்நெஞ்சில்
பத்திரமாய் வாழ்கின்ற
சித்திரமே! ஆருயிரே!
கொத்துமலர்ச் சிந்தனைகள்
கொழிக்கின்ற பூக்காடே!
முத்துவிழா வும்தாண்டி
முன்னேறும் பொன்னேடே!

ஒப்பனைக் கவர்ச்சியிலே
உள்ளம் பறிகொடுத்தே
கற்பனைக் கனவுகளில்
கவிழ்ந்திருக்கும் தலைமுறைக்குத்
திட்பம் கொடுத்து,மனத்
தெளிவும் விளைத்துவரும்
செப்பேடே! கருத்தியல்
தேன்ததும்பும் தமிழூற்றே!

தித்திக்கும் தமிழுக்கோர்
தீங்கென்றால் மறுநொடியே
எத்திக்கும் கேட்கும்
இடியின் எதிரொலியே!
முத்தமிழர்க் கென்றும்உயிர்
மூச்சொலியே! பேச்சொலியே!
தத்துவத்தின் அடைமொழியே!
தன்மானச் சுடரொளியே!

சாத்திரச் சடங்குகளில்
சாதிகளில் வீழ்ந்துழன்ற
மாத்தமிழர் துயில்கலைத்து
வைகறைக்குச் சுடரெடுத்துப்
பூத்தவிடி வெள்ளியெனப்
புகழ்த்தலைவர் கலைஞருக்கு
“மூத்தபிள்ளை” யாகவந்த
முரசொலியே! வாழியவே!



... கவிச்சுடர்
**கவிதைப்பித்தன்.**